# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## றோயல் புண்ணியமைப்பு மன்றம்
## (கூட்டிணைத்தல்)

**றோயல் புண்ணியமைப்பு மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு
சட்டமூலம்**

---

*பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ எம்.ரி. ஹஸன் அலி அவர்களால் 2014,
மாச்சு மாதம் 07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது*

*(2014, பெப்புருவரி மாதம் 03 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

**[ 290 ஆம் சட்டமூலம் ]**


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 8.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

## றோயல் புண்ணியமைப்பு மன்றம்
## (கூட்டிணைத்தல்)

### றோயல் புண்ணியமைப்பு மன்றத்தைக் கூட்டிணைப்பதற் கான தொரு சட்டம்

முன்னுரை.

“றோயல் புண்ணியமைப்பு மன்றம்” என அழைக்கப்படுவதும், அறியப்படுவதுமான மன்றமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட மன்றத்துடன் தொடர்புபட்ட குறிக்கோள்களையும், எல்லாக் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்காகத் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் :

அத்துடன் சொல்லப்பட்ட மன்றம் எப்பல்வேறு குறிக்கோள் களுக்காகவும், கருமங்களுக்காகவும் உருவாக்கப்பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும், கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும், கொண்டுநடாத்தியும் வந்துள்ள தாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ள தாதலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்காகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயர்.

**1**. இச்சட்டம், 2014 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, றோயல் புண்ணியமைப்பு மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

றோயல் புண்ணியமைப்பு மன்றத்தைக் கூட்டிணைத்தல்.

**2**. இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும், அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் “மன்றம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) றோயல் புண்ணியமைப்பு மன்றத்தின் தற்போதைய உறுப்பினர்களாக உள்ளவர்களும் அல்லது இத்தால் அமைக் கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக் கொள்ளப்படுபவர்களுமான அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப்பின்னர் “ கூட்டுத்தாபனம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) “றோயல் புண்ணியமைப்பு மன்றம்” என்ற பெயரின்கீழும் மகுடத்தின்கீழும் இடையறா வழியுரிமை கொண்ட ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாகவிருத்தல்

2-PL 008022 -45 (2014/01)

வேண்டும் என்பதோடு, அது அப்பெயர் கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் வழக்குத் தொடுக்கலாமென்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். அத்துடன், பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும் விரும்பியாங்கு அதனை மாற்றவும் அது முழுத்தத்துவமும் அதிகாரமும் கொண்டதாயிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3.** கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக்குறிக் கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப் படுத்தப்படுகின்றது :-

(அ) அநாதை இல்லம், முதியோர் இல்லம் அமைத்தல், நடாத்திச் செல்லுதல் மற்றும் சமூகநலன்புரி நிலையம் அமைத்தல் ;

(ஆ) ஆதரவற்ற மற்றும் ஏழ்மையான மக்களுக்கு சக்கர நாற்காலி, அக்குள் தாங்கி மற்றும் மூக்குக் கண்ணாடி வழங்குதல் ;

(இ) வீடற்ற மக்களுக்கு வீடமைத்துக் கொடுத்தல் மற்றும் நிர்மாண வேலைகளைப் பூர்த்தி செய்ய முடியாத வர்களுக்கு உதவிகளை வழங்குதல் ;

(ஈ) வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு உதவுதல் ;

(உ) வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு அவசியமான உலர் உணவுகளை வழங்குதல் ;

(ஊ) ஆக்க முறையான சிந்தனையை வளர்ப்பதற்காகவும் வாழ்க்கையில் சிக்கல் தோன்றும் தருணங்களைக் குறைப்பதற்காகவும் அவசியமான செயலமர்வுகளை நடத்துதல் ;

(எ) கமத்தொழிலில் ஈடுபடுவோருக்கும் வேறு சிறு தொழில் முயற்சிகளில் ஈடுபடுவோருக்கும் உதவிகள் வழங்குத லும் அவசியமான ஆலோசனைகளை வழங்குதலும் ;

(ஏ) துப்பரவேற்பாடுகள் மற்றும் தண்ணீர் வசதிகள் இல்லாதோருக்கு அவ்வசதிகளைச் செய்து கொடுத்தல் ;

(ஐ) கை கால்களை இழந்தவர்களுக்கு செயற்கைக் கை கால்களை வழங்குதல் ;

(ஒ) பிணியாய்வுச் சேவைகளை நடாத்துதல் ;

(ஓ) மிகவும் வசதியற்ற இளைஞர் யுவதிகளுக்கு திருமண வைபவங்களை ஏற்பாடு செய்தல் ; அத்துடன்

(ஔ) இளைஞர்களுக்கான கணினி அறிவினைப் பெற்றுக் கொடுப்பதற்காக வேலைத்திட்டங்களை ஏற்பாடு செய்தல்.

**கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.**

**4.** (1) இச்சட்டத்தின் ஏனைய ஏற்பாடுகளுக்குக் கட்டுப்பாட்டதாகவும் அப்போதைக்குக் கூட்டுத்தாபனத்தில் வலுவிலுள்ள விதிகளுக்கு அமைவாகவும் தெரிவு செய்யப்படுகின்ற தவிசாளர், செயலாளர், பொருளாளர் மற்றும் ஏனைய பதினொரு பேர்களைக் கொண்ட பணிப்பாளர் சபையொன்றினால் கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள் நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது பணிப்பாளர் சபை, இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று மன்றத்தின் நிர்வாக சபையில் பதவி வகித்தவர்களை உள்ளடக்கியதாக அமைதல் வேண்டும்.

**கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.**

**5.** இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் எதனையேனும் மேம்படுத்துவதற்கு அல்லது முன்னேற்றுவதற்கு அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும், காரியங்களையும், செய்யவும், புரியவும், நிறைவேற்றவும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும். இத்தத்துவங்களுள், கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைய வங்கிக்

கணக்குகளைத் தொடங்குதல், செயற்படுத்தல், முடிவுறுத்தல் என்பவற்றுக்கும் பிணைப்பொறுப்புடனோ அல்லது பிணைப் பொறுப்பின்றியோ பணம் கடனாகப் பெறுதற்கும் அல்லது திரட்டுவதற்கும் அல்லது சேகரிப்பதற்கும், அதன் நிதிகளை முதலீடு செய்வதற்கும் மற்றும் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள் களை நிறைவேற்றுதற்குத் தேவையான அலுவலர்களையும், சேவையாளர்களையும் வேலையிலீடுபடுத்தல், வேலைக்கமர்த்தல், வேலையிலிருந்து நீக்குதல் என்பவற்றுக்குமான தத்துவமும் அடங்கும்.

**கூட்டுத்தாபனத்தின் விதிகள்.**

**6**. (1) கூட்டுத்தாபனத்தின் ஏதேனும் பொதுக் கூட்டத்தில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டு பங்குக்குக் குறையாத வாக்குப் பெரும்பான்மை கொண்டு பின்வரும் கருமங்கள் எல்லாவற்றுக்கும் அல்லது எவற்றுக்கும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளைக் காலத்திற்குக்காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்திற்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :-

(அ) உறுப்பினர்களைச் சேர்த்துக் கொள்ளல், அவர்கள் பதவிவிலகல் அல்லது அவர்களை விலக்குதல் ;

(ஆ) பதவி தாங்குநர்களைத் தெரிவு செய்தல், அவர்களின் பதவிவிலகல் அல்லது பதவியை வறிதாக்குதல், அவர்களைப் பதவிநீங்கச் செய்தல் மற்றும் அவர்களின் அதிகாரங்கள், நடத்தைகள் மற்றும் பணிகள் ;

(இ) பணிப்பாளர் சபை உறுப்பினர்களைத் தெரிவுசெய்தல், அதன் தத்துவங்கள், நடத்தைகள் மற்றும் பணிகள், சபை உறுப்பினர்களின் பதவிக்காலம் மற்றும் சபை உறுப்பினர்களின் வெற்றிடங்களைப் பூர்த்தி செய்தல் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு பதவிதாங்குநர்களின், பிரதிநிதிகளின் மற்றும் ஊழியர்களின் அதிகாரங்கள், நடத்தைகள், பணிகள் மற்றும் கடமைகள் ;

(உ) பணிப்பாளர் சபையின் கூட்டங்களைக் கூட்டுதலும், நடாத்துதலும் தொடர்பான நடவடிக்கை முறையும், அத்தகைய கூட்டங்களின் நேரங்கள் பற்றிய அறிவித்தல் களும் நிகழ்ச்சிநிரலும், அதற்கான கூட்ட நடப் பெண்ணும், அத்தகைய கூட்டங்களில் கடைப்பிடிக்க வேண்டிய நடவடிக்கை முறையும் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தலும், முகாமை செய்தலும் ; அத்துடன்

(எ) பொதுவாக கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தலும் அதன் குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்ளலும்.

(2) கூட்டுத்தாபனத்தினால் ஆக்கப்பட்ட ஏதேனும் விதி (1) ஆவது உப பிரிவின் கீழ் விதிகள் ஆக்கப்படுகின்ற அதே விதத்திலும் அதுபோன்ற கூட்டத்திலும் திருத்தவும், மாற்றவும் அதற்கு ஏதேனுமொன்றைச் சேர்க்கவும் அல்லது நீக்கச் செய்யவும் முடியும்.

(3) கூட்டுத்தாபனத்தின் அங்கத்தவர்கள் கூட்டுத் தாபனத்தின் அப்போதைக்கு வலுவில் உள்ள விதிகளுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

மன்றத்தினால் செலுத்தப்பட வேண்டிய மற்றும் அதற்கு வருமதியாக வுள்ள கடன்கள்.

**7**. இச்சட்டம் அமுலுக்குவரத் தொடங்கிய தேதிக்கு நேர்முந்திய திகதியன்று மன்றத்தில் நிலவிய சகல கடன்களும் பொறுப்புக் களும் இத்தால் கூட்டிணைக்கப்படுகின்ற கூட்டுத்தாபனத்தினால் செலுத்தித் தீர்க்கப்படல் வேண்டுமென்பதோடு, அத்தினத்தன்று மன்றத்திற்குச் செலுத்தப்பட வேண்டிய அனைத்துக் கடன்கள், அங்கத்துவப் பணம், சந்தாப்பணம் இச்சட்டத்தின் நோக்கத் திற்காக கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்படலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் நிதியம்.*

**8.** (1) கூட்டுத்தாபனம், அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதோடு, இதற்குமுன்னரோ அல்லது இதன்பின்னரோ வெகுமதிகள், ஆணைகள், நன்கொடைகள், அங்கத்துவப் பணம், சந்தாப்பணம், கட்டணங்கள் அல்லது அளிப்புக்களாக ஏற்கப்படுகின்ற சகல பணத்தொகைகளும் பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்படுகின்றவாறான வங்கியில் அல்லது வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் பெயரில் கணக்கொன்றில் வரவு வைக்கும்பொருட்டு வைப்புச் செய்யப் படல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின்கீழான கடமைகள், பொறுப்புக்கள் மற்றும் அதன் தத்துவங்களை அமுலாக்குகையிலும் ஈடேற்றுகையிலும் பாவனையின்போதும் கூட்டுத்தாபனத்தினால் உறப்பட்டுள்ள எந்தவொரு செலவினமும் செலுத்தித் தீர்க்க அவசியமான அனைத்துப் பணமும் நிதியத்தில் இருந்து செலுத்தப்படல் வேண்டும்.

*கூட்டுத்தாபனம் அசைவுள்ளதும் அசைவற்றதுமான ஆதனத்தை வைத்திருத்தல்.*

**9.** ஏதேனும் கொள்வனவு, மானியக் கொடை, கொடை அல்லது இறுதிவிருப்பாவணக் கையளிப்பின்மீது அல்லது வேறு வகையாகக் கூட்டுத்தாபனத்திற்கு உரித்தாக வரக்கூடிய ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை எடுக்கவும் வைத்திருக்கவும் கூட்டுத்தாபனம் ஆற்றலுடையதாதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய எல்லா ஆதனங்களும் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கமையவும் அத்துடன் தொடர்புபட்ட கையாளுகைச் சாசனத்தின் ஏற்பாடுகளுக்கமையவும், நிபந்தனைகளுக்கமையவும் அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது பொறுப்பிக்கவுள்ள முழுத்தத்துவத்துடன் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக்கப் படுதலும் வேண்டும்.

*உறுப்பினர்களின் பொறுப்பை வரையறுத்தல்.*

**10.** கூட்டுத்தாபனத்தின் உறுப்பினரெவரும், கூட்டுத்தாபனத்தின் தனிசுகளையும் பொறுப்புக்களையும் கொடுத்துத் தீர்க்கும் நோக்கத்துக்காக அல்லது வேறேதேனும் நோக்கத்துக்காக, அவரிடமிருந்து கூட்டுத்தாபனத்திற்கு வருமதியாக இருக்கக்கூடிய அத்தகைய உறுப்பினரிடமிருத்து செலுத்தப்படவேண்டிய தொகையை விஞ்சுகின்ற ஏதேனும் உதவுதொகையைச் செலுத்துவதற்கு ஆளாதலாகாது.

**11.** கூட்டுத்தாபனம் கலைக்கப்படுவதன்மீது அதன் எல்லாக் கடன்களும் மற்றும் பொறுப்புக்களும் தீர்க்கப்பட்டதன் பின்னர் எத்தகையதுமான ஏதேனும் ஆதனம் எஞ்சியிருப்பின் அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதலாகாது. ஆனால், கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை ஒத்த குறிக்கோள்களைக் கொண்டதும் அல்லது கொண்டனவும், ஏதேனும் வருமானத்தை அல்லது இலாபத்தை அதன் அல்லது அவற்றின் உறுபினர்களிடையே பகிர்ந்தளிப்பதிலிருந்து விதிகளினால் தடைசெய்யப்பட்டதும் அல்லது தடை செய்யப்பட்டனவுமான வேறு ஏதேனும் நிறுவனத்திற்கு அல்லது வேறு எவையேனும் நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும். அத்தகைய நிறுவனம் கலைக்கப்படும் பட்சத்தில் அல்லது அதற்கு உடன் முன்னர் கூட்டுத்தாபனத்தின் சபையினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

கலைப்பின் போது எஞ்சியிருக்கின்ற ஆதனம்.

**12.** (1) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

கணக்குகளும் கணக்காய்வும்.

(2) கூட்டுத்தாபனமானது, அதன் வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்களும் பொறுப்புக்களும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் மற்றெல்லாக் கொடுக்கல் வாங்கல்கள் என்பன பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் சபையினால் நியமிக்கப்பட்ட ஒரு தகைமைபெற்ற கணக்காய்வாளர் ஒருவரினால் கணக்காய்வு செய்யப்படல் வேண்டும்.

(4) இப்பிரிவில் "தகைமை பெற்ற கணக்காய்வாளர்" என்பது -

(அ) இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினராக இருந்து, அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளரொருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுமுள்ள தனியாள் ஒருவர் ; அல்லது

(ஆ) கணக்காளர் குழுமமொன்றின் வதிவுள்ள பங்காளர்களுள் ஒவ்வொருவரும் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பின ரொருவராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப் பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராக இருந்து, அத்தகைய நிறுவகத்தினால் கணக்காளரொருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்ட வராகவுமுள்ள கணக்காளர் குழுமம் ஒன்று,

என்று பொருள்படும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

**13**. கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது தவிசாளர் மற்றும் செயலாளரின் முன்னிலையிலன்றி, எத்தன்மையினது மான சாசனமெதிலும் பொறிக்கப்படுதலாகாதென்பதுடன், அவர்கள் தாங்கள் சமுகமாயிருந்ததற்கு அடையாளமாக அச்சாசனத்தில் தங்களது பெயர்களை எழுதி ஒப்பமிடுதல் வேண்டுமென்பதுடன் அவ்வாறு ஒப்பமிடுதலானது எவரேனும் ஆள் சாட்சியாக ஒப்பமிடுவதிலிருந்தும் தனி வேறானதாதலும் வேண்டும்.

*குடியரசினதும் ஏனையோரினதும் உரிமைகளைப் பேணுதல்.*

**14**. இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும் குடியரசின் உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட ஏதேனும் குழுவினது உரிமைகளையேனும் பங்கப்படுத்தலோ பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**15**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்